சுருக்கம்

பணியமைப்பு – நெடுஞ்சாலைத் துறை – தமிழ்நாடு நெடுஞ்சாலைப் பொறியியல் பணி – கோட்டப் பொறியாளர்கள் பதவி உயர்வில் கண்காணிப்புப் பொறியாளர்களாக பணி நியமனம் – மூன்று கண்காணிப்புப் பொறியாளர்கள் பணியிட மாற்றம் மற்றும் பணியமர்த்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்கே. 1) துறை

அரசாணை (3டி) எண்: 4 நாள் : 20–01–2011

தை 6, திருவள்ளுவர் ஆண்டு 2042

படிக்கவும்:-

1. அரசாணை (நிலை) எண். 322, நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் துறை, நாள் 23–12–2010
2. முதன்மை இயக்குநர் அவர்களின் கடித எண் 1350/ கமு1/ 2010– 19, நாள் 06–11–2011.

******

ஆணை:

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் 2010–2011 ஆம் ஆண்டிற்கான கண்காணிப்புப் பொறியாளர் பதவிக்கு தகுதிபெற்ற 18 கோட்டப் பொறியாளர்களின் தற்காலிக தேர்ந்தவர் பெயர்ப் பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

2. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் முதன்மை இயக்குநர் அவர்கள் மேற்படி தற்காலிக தேர்ந்தவர் பெயர் பட்டியலில் இடம் பெற்றுள்ள கீழ்க்காணும் ஒன்பது கோட்டப் பொறியாளர்களுக்கு பதவி உயர்வு அளித்து கண்காணிப்புப் பொறியாளர்களாக பணியமர்த்தி ஆணையிடுமாறு கோரியுள்ளார்.

| வரிசை எண் | தேர்ந்தவர் பெயர்ப் பட்டியலில் வரிசை எண் | பெயர் திருவாளர்கள் |
|---|---|---|
| 1 | 1 | ஆர். அருணாசலம் |
| 2 | 2 | வி. வெங்கடேசன் |
| 3 | 3 | கே. துரைராஜ் |
| 4 | 4 | எஸ். இராமகிருஷ்ணன் |
| 5 | 5 | எம். ரெங்கசாமி |
| 6 | 6 | சி. பெரியசாமி |
| 7 | 7 | கே. பி. முத்துசாமி |
| 8 | 8 | ப்பி. முருகேசன் |

| 9 | 9 | ஆர். கிருஷ்ணகுமார் |
|---|---|---|

**3.** தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணி விதிகளில் விதி **39(a)(i)** ன் கீழ் மேலே பத்தி **2**ல் குறிப்பிடப்பட்டுள்ள கோட்டப் பொறியாளர்கள் தமிழ்நாடு நெடுஞ்சாலைப் பொறியியல் பணி விதிகளில் இனம்–III-ல் உள்ள கோட்டப் பொறியாளர் பதவியிலிருந்து இனம்–II-ல் உள்ள கண்காணிப்புப் பொறியாளர் பதவிக்கு பதவி உயர்வு அளித்து அவர்கள் பணி ஏற்கும் நாள் முதல் பணியமர்த்தப்படுகின்றனர்.

**4.** மேலே பத்தி **3**ல் பதவி உயர்வு அளிக்கப்பட்ட கண்காணிப்புப் பொறியாளர்கள் அவர்களின் பெயருக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள பணியிடங்களில் கீழ்க்கண்டவாறு பணியமர்த்தப்படுகின்றனர் :-

| வ. எண். | பெயர் மற்றும் பதவி | கண்காணிப்புப் பொறியாளராக பதவி உயர்வில் பணியமர்த்தப்படும் இடம் |
|---|---|---|
| 1. | திரு. ஆர். அருணாச்சலம்,<br>துணைக் கண்காணிப்புப் பொறியாளர்,<br>கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, சென்னை | இணை இயக்குநர், (நிர்வாகம்),<br>முதன்மை இயக்குநர் அலுவலகம்,<br>நெடுஞ்சாலைத் துறை, சென்னை– **5.** |
| 2. | திரு வி. வெங்கடேசன்<br>கோட்டப் பொறியாளர், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, கடலூர். | கண்காணிப்புப் பொறியாளர், நபார்டு மற்றும் கிராமச் சாலைகள், திருச்சி. |
| 3 | திரு கே. துரைராஜ்,<br>கோட்டப் பொறியாளர், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, புதுக்கோட்டை | கண்காணிப்புப் பொறியாளர்,<br>பெருநகரம், சென்னை. |
| 4 | திரு. எஸ். இராமகிருஷ்ணன், உதவி தலைமைப் பொறியாளர், தரஉறுதி மற்றும் ஆராய்ச்சி, சென்னை | கண்காணிப்புப் பொறியாளர்,<br>திட்டங்கள், மதுரை |
| 5 | திரு. எம். ரெங்கசாமி,<br>கோட்டப் பொறியாளர், தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டம், விருத்தாச்சலம். | கண்காணிப்புப் பொறியாளர்,<br>நபார்டு மற்றும் கிராமச் சாலைகள், திருநெல்வேலி |
| 6 | திரு சி. பெரியசாமி,<br>கோட்டப் பொறியாளர்,<br>தேசிய நெடுஞ்சாலை, வேலூர் | இணை இயக்குநர் (தரக்கட்டுப்பாடு),<br>முதன்மை இயக்குநர் அலுவலகம்,<br>நெடுஞ்சாலைத் துறை, சென்னை |
| 7 | திரு கே.பி. முத்துசாமி,<br>கோட்டப் பொறியாளர்,<br>கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, தருமபுரி | கண்காணிப்புப் பொறியாளர், திட்டங்கள், கோயம்புத்தூர். |
| 8 | திரு ப்பி. முருகேசன்,<br>கோட்டப் பொறியாளர்,<br>நபார்டு மற்றும் கிராமச் சாலைகள், செங்கல்பட்டு | கண்காணிப்புப் பொறியாளர்,<br>தேசிய நெடுஞ்சாலை, திருநெல்வேலி |

| | | |
|---|---|---|
| 9 | திரு ஆர். கிருஷ்ணகுமார்,<br>கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் அமைச்சர் அவர்களின் கூடுதல் சிறப்பு நேர்முக உதவியாளர். | (கண்காணிப்புப் பொறியாளர் பதவி நிலையில்)<br><br>நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் அமைச்சர் அவர்களின் கூடுதல் சிறப்பு நேர்முக உதவியாளர். |

5. மேலும் பின்வரும் மூன்று கண்காணிப்புப் பொறியாளர்கள் அவர்களின் பெயருக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள பணியிடங்களுக்கு மாறுதல் செய்யப்படுகின்றனர்.

| வ. எண். | பெயரும் பதவியும் | பணிமாறுதலில் பணிநியமனம் வழங்கப்படும் பணியிடம் |
|---|---|---|
| 1. | திரு கே. அமிர்தீன்,<br>கண்காணிப்புப் பொறியாளர்,<br>நபார்டு மற்றும் கிராமச் சாலைகள், சேலம் | கண்காணிப்புப் பொறியாளர்,<br>தேசிய நெடுஞ்சாலை, சேலம். |
| 2. | திரு எம். ஸ்ரீரங்கன்,<br>கண்காணிப்புப் பொறியாளர், திட்டங்கள், மதுரை | கண்காணிப்புப் பொறியாளர்,<br>நபார்டு மற்றும் கிராமச் சாலைகள், சேலம் |
| 3 | திரு எ. சாமுவேல் எபினேசர் ஜெபராஜன்,<br>கண்காணிப்புப் பொறியாளர்,<br>நபார்டு மற்றும் கிராமச் சாலைகள், திருநெல்வேலி | இணை தலைமைப் பொறியாளர் ,<br>திட்டம் வடிவமைப்பு மற்றும் ஆய்வு, சென்னை. |

6. மேலே பத்தி 3ல் வழங்கப்பட்ட பதவி உயர்வானது உதவிக் கோட்டப் பொறியாளர் நிலையில் பணிமூப்பு திருத்தம் வெளியிடுதல் குறித்து வழங்கப்பட்ட பல்வேறு நீதிமன்ற ஆணைகளுக்கு உட்பட்டதாகும். இப்பதவி உயர்வு காரணமாக மட்டும் தனியர்கள் கண்காணிப்புப் பொறியாளர் பதவி உயர்வில் உரிமை கோர இயலாது. இப்பதவி உயர்வானது தற்காலிகமானது என்றும், எந்த ஒரு முன்னறிவிப்புமின்றி கீழ் பதவிக்கு அவர்கள் பணியிறக்கம் செய்யப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

7. அரசுக் கடித எண் 8119/FR-III/1980, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 30–4–1980ன்படி மேலே பத்தி 2ல் கண்காணிப்புப் பொறியாளர் நிலைக்கு பதவி உயர்வு பெற்ற கோட்டப் பொறியாளர்களின் ஊதியத்தை நிர்ணயிக்க ஏதுவாக அவர்கள் அனைவரும் கண்காணிப்புப் பொறியாளர் பதவியில் நிரந்தர நியமனம் பெறுவதற்கு தேவையான அனைத்து தகுதிகளையும் நிறைவு செய்கின்றனர் என்று சான்றளிக்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கோ. சந்தானம்,
அரசு
செயலாளர்.

பெறுநர்

தனியர்கள்

முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை–5. (வழியாக)
முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை–5.
தலைமைப் பொறியாளர், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, சென்னை–5.
தலைமைப் பொறியாளர், திட்டம், வடிவமைப்பு மற்றும் ஆய்வு, சென்னை 32.
தலைமைப் பொறியாளர், திட்டங்கள், சென்னை–15.
தலைமைப் பொறியாளர், தரஉறுதி மற்றும் ஆராய்ச்சி, சென்னை –32.
தலைமைப் பொறியாளர் , தேசிய நெடுஞ்சாலை, சென்னை–5.
தலைமைப் பொறியாளர், நபார்டு மற்றும் கிராமச் சாலைகள், சென்னை–32.
தலைமைப் பொறியாளர், பெருநகரம், சென்னை – 16.
திட்ட இயக்குநர், தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டம், சென்னை–20.
அரசு செயலாளர், பொதுத் துறை, சென்னை – 9.
மாநில கணக்காயர், சென்னை – 18.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை –8/35
சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர்.

**நகல்.**

மாண்புமிகு அமைச்சர் (நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9
செயலாளர் நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அவர்களின் தனிச் செயலர், சென்னை–9
உதிரி நகல் / இருப்புக் கோப்பு

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.